202

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி சிறப்பு நிகழ்ச்சித்திட்டம் (இயற்கை விஞ்ஞானம்) - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2022/2023

**STU5512– கல்வி முகாமைத்துவம்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 13.11.2023 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

பகுதி **I** இல் சகல வினாக்களுக்கும் பகுதி **II** இல் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்கவும்

## பகுதி – I

1. 'குடும்ப செயன்முறையில் கல்வி என்ற எண்ணக்கரு உள்ளடக்கியிருக்கின்றது' – S.Peters மேற்கொண்ட கூற்றினை அடிப்படையாக கொண்ட கல்வி என்ற எண்ணக்கருவை குறிப்பிடுக.
2. கல்வி தத்துவம் என்பதனால் கருதப்படுவது யாது? சுருக்கமாக விளக்குக.
3. கார்ல் மார்க்ஸினால் முன்வைக்கப்பட்ட **ஐந்து** (05) பிரதான முன்மொழிவுகளைக் குறிப்பிடுக.
4. 'கலாசாரம்' மற்றும் 'சமூகமயமாக்கல்' எண்ணக்கருவை விளக்குக.
5. இலங்கையின் இரண்டாம் நிலை கல்வியில் தென்படக் கூடிய **ஐந்து** (05) பிரச்சினைகளைக் குறிப்பிடுக.
6. நான்கு (04) சமூக கட்டமைப்புக்களைக் குறிப்பிட்டு அதில் **ஒன்றினைச்** (01) சுருக்கமாக விளக்குக.
7. தற்போது முறையில் கல்வி சமூகத்தில் முக்கிய்மானதொன்றாக மாறி வருகின்றது. நீங்கள் இக்கூற்றுடன் உடன்படுகின்றீர்களா? **இரண்டு** (02) காரணங்களைத் தருக.
8. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் அபிவிருத்திக்காக கல்வியினால் பங்களிக்க கூடிய **நான்கு** (04) பொறுப்புக்களைக் குறிப்பிடுக.

**(5 x 8 = 40** புள்ளிகள்)

## பகுதி – II

9.

**i.** தத்துவத்தின் பிரதான **மூன்று** (03) அம்சங்களைக் குறிப்பிடுக.

**(03** புள்ளிகள்)

**ii.** கல்வியின் அடிப்படைகளின் பிரதான **இரண்டு** (02) அணுகுமுறைகளைக் குறிப்பிட்டு அவற்றில் **ஒன்றினை** (01) விளக்குக.

**(08** புள்ளிகள்)

**iii.** ஒரு ஆசிரியருக்கு கல்வி தத்துவம் எவ்வகையில் பிரயோசனமாக அமைகின்றது? **இரண்டு** (02) காரணங்களை குறிப்பிடுவதன் மூலம் கலந்துரையாடுக.

**(09** புள்ளிகள்)

10.

**i.** ரூஸோவின் கல்வி தத்துவத்திற்கு ஏற்ப, ஒரு பிள்ளை மூன்று (03) ஊடகங்களினூடாக கல்வியை பெறுதல் வேண்டும். அந்த மூன்று (03) ஊடகங்களை பெயரிடுக.

**(03** புள்ளிகள்)

ii. ரூஸோவின் கல்வி திட்டத்திற்கு ஏற்ப, விஞ்ஞானம் கற்பித்தலின் போது பயன்படுத்தக்கூடிய மூன்று கற்பித்தல் உபாயங்களை கலச்துரையாடுக. **(08 புள்ளிகள்)**

iii. மேற்குறித்த உபாயங்களை பயன்படுத்தும் போது நீங்கள் எதிர்நோக்கக்கூடிய **மூன்று** (03) பிரச்சினைகளைக் குறிப்பிட்டு அப்பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கான ஆலோசனைகளை முன்வைக்குக.

**(09 புள்ளிகள்)**

11.

i. 'மனப்பாங்கு' மற்றும் 'விழுமியம்' ஆகியவற்றிற்கிடையிலான நேர்மறை உறவினை சுருக்கமாக விளக்குக.

**(04 புள்ளிகள்)**

ii. 'ஒழுக்கம்' என்பதனை விளக்குக. பாடசாலை மாணவர்களின் ஒழுக்கநெறி விருத்தி செய்வதற்காக நடைமுறைப்படுத்தப்படும் மூன்று இணைப்பாடவிதான செயற்பாடுகளைச் சுருக்கமாக விளக்குக.

**(08 புள்ளிகள்)**

iii. உதாரணங்களைக் குறிப்பிடுவதன் மூலம் மாணவர்களின் வாழ்க்கையில் சிறந்த தத்துவத்தினை கட்டியெழுப்ப விழுமிய கல்வியின் மூலம் எவ்வாறு முடிகின்றது என்பதை குறிப்பிடுக. **(08 புள்ளிகள்)**

12.

i. சமவயது குழு என்பதனால் கருதப்படுவது யாது? சுருக்கமாக விளக்குக.

**(04 புள்ளிகள்)**

ii. கட்டிளமைப்பருவ சமூகமயமாக்கலில் சமவயது குழுவினரின் நேர்மறை மற்றும் எதிர்மறைத் தாக்கங்கள் **நான்கினைக்** (04) கலந்துரையாடுக.

**(08 புள்ளிகள்)**

iii. பிள்ளைகளின் சமூகமயமாக்கலில் மறை நிலைத்திட்டம் மிக முக்கிய வகிபாகத்தினை வகிக்கின்றது என்பதனை நீர் ஏற்றுக்கொள்கின்றீரா? **மூன்று** (03) காரணங்களுடன் விளக்குக.

**(08 புள்ளிகள்)**

13.

i. வாழ்க்கை நீடித்த கல்வியின் **நான்கு** (04) பண்புகளைக் குறிப்பிடுக.

**(04 புள்ளிகள்)**

ii. 'திறந்த கல்வி' என்ற எண்ணக்கருவை விளக்கி திறந்த கல்வியின் மூலம் கல்வியினை பெறும் மாணவன் எனும் வகையில் உங்களது **மூன்று** (03) அனுபவங்களை விளக்குக. **(08 புள்ளிகள்)**

iii. திறந்த கல்வி நிறுவனமொன்றின் **நான்கு** (04) பண்புகளைக் குறிப்பிட்டு, கற்போரின் கற்றல் நோக்கங்களை அடைவதில் அதன் பங்களிப்பை மதிப்பிடுக.

**(08 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -